# சங்க இலக்கியத்தில் பெண்ணின் வாழ்வியல்

**ச. புனிதா**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
மாநிலக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

சங்க இலக்கியம் பண்டைத்தமிழிரின் வாழ்வாதாரத்தைப் பதிவாக்கியுள்ளது. அகம் புறம் என்று இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. அகம் சார்ந்த இலக்கியத்தில் பெண் சார்ந்த வாழ்வும் புறம் சார்ந்த இலக்கியத்தில் பெண் வாழ்வு முறையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. சங்க இலக்கியம் பெண்ணின் வரையறை குறித்து இலக்கியம் எடுத்தியம்புகிறது; மகளிர் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர் என்பதை விளக்கியுள்ளது. உழைப்பிலும் முன்னேற்றத்திலும் முதன்மையாகப் பெண்கள் விளங்கினர். அகத்தில் பெண்ணின் திருமணமுறை, குடும்பம், விருந்தோம்பல் ஆகியவற்றையும் புறத்தில் பெண்ணின் தொழில், ஆடை, அணி, வீரம், கல்வி ஆகியனவற்றின் சிறப்புகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

### திருமண முறை

பெரியோர்கள் ஒன்றுகூடி நல்ல நாள் பார்த்து மணப்பந்தலிட்டு மணமகளுக்குத் திருமணம் செய்து முடிக்கின்றனர். அத்திருமணம் பெண்ணின் வாழ்க்கை முறைக்கு அடிப்படை ஆதாரமாக அமைகிறது. அகத்தில் திருமண நிகழ்வைப் புதுமணல் பரப்பிய இடத்தில் கால்நட்டு மணப்பந்தல் இட்டு மாலைகளைத் தொங்கவிட்டு விளக்குகளை ஏற்றி வானத்தில் உரோகினி என்னும் நட்சத்திரம் கூடிய முழு நிலவுக் காலத்தில் காலைப் பொழுதில் மணம் முடிக்க ஆரவாரத்துடன் மங்கல மகளிர் சிலர் ஒன்றுகூடி தலையில் நீர்க்குடத்துடனும், சிலர் மண்டை என்னும் அகல்விளக்கை ஏந்தியும், சிலர் மணப் பொருள்கள் அனைத்தையும் குவித்து வைக்கும் முறையினை மேற்கொண்டனர். அப்பெண்களில் புதல்வனை ஈன்ற மங்கல மகளிர் நால்வர் கூடி நின்று மணமகளை நீ விரும்பும் கணவன் உன்னைப் பெரிதும் விரும்பும் விருப்பமுடையவளாகுக எனப் பெண்ணிற்கு முதல் உரிமை கொடுத்து அவளை வாழ்த்தி, குளிர்ச்சி பொருந்திய மலரினைத் தூவும் முறையும் அகநானூறு எடுத்துரைக்கிறது. மணமுறை முடிந்ததும் சுற்றத்தார் அனைவரும் ஒன்றுகூடி நீ சிறந்த இல்லக்கிழத்தியாகுக என்று வாழ்த்தும் முறை பெண்ணிற்கு முதன்மை இடத்தை அளிப்பதை உணரமுடிகிறது. இதனை,

"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற்று அமலை நிற்ப, நிரைகால்
தண் பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி,
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காணக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடுஇல் விழுப்புகழ் நாள்தலை வந்தென,
உச்சிக் குடத்தர் புத்துஅகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னம் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலைஅவ் வயிற்று
வால்இழை மகளிர் நால்வர்கூடி
கற்பின் வழாவு நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை ஆக என,
நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி
பல்இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க,
வதுவை நல்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேர் எனப் புகுதந்து
பேர்இல் கிழத்தி ஆகஎனத் தமர்தர"[1]

என்னும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

## இல்லறத்தில் பெண்

சமூகத்தில் அங்கமாகக் குடும்பம் திகழ்கிறது. பல குடும்பங்கள் சேர்ந்ததுதான் இனக்குழு உருவாகிறது. இனக்குழுவோ ஒன்றுக்கு மேற்பட்ட இனக்குழுக்களோ சேர்ந்து சமூகம் எனப்படுகிறது. சமூகத்தில் சிறிய அங்கமாகக் குடும்பம் அமைகிறது. குடும்பம் என்று வரும்போது அக்குடும்பத்தில் ஆண், பெண் இருவரும் முக்கிய உறுப்பினர்களாக திகழ்கின்றனர். தாய், தந்தை, பிள்ளைகள், சுற்றத்தார்கள், குடும்பம் என்னும் அமைப்பின் அங்கங்களாகத் திகழ்கின்றன. பெண், குடும்பத்தின் பிரதிபலிப்பாக அமைகிறாள். பொறுப்புகள் அதிகமாகும் நிலையும், மக்களைப் பெற்றுத் தாய்மை நிலையிலும் பெண் அடையும் சிறப்பும் மேன்மையும் அகம் விளக்குகிறது. இதனை,

"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுஇன்று எய்துப,
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்"[2]

என்னும் பாடல் புலப்படுத்துகிறது.

## விருந்தோம்பலில் பெண்

வீட்டிற்கு வரும் விருந்தினரை முகம் கோணாமல் உபசரிக்கும் பழக்க வழக்கத்தைத் தமிழர்கள் பண்பாடாகக் கொண்டனர். தனக்கு இல்லை என்றாலும் வரும் விருந்தினர்க்குக் கொடுத்து மகிழும் பண்பை விருந்து உபசரிக்கும் இல்லறத்தில் வாழும் பெண் பெற்றிருந்தாள். தமிழரின் தனிப்பண்பு நலனாக விருந்தோம்பல் அமைகிறது. சங்ககாலத் தமிழர்கள் விருந்து உபசரித்தலைப்

பெருஞ்சிறப்பாகக் கருதி வந்தனர். இல்லத்திற்கு எவ்வளவு விருந்தினர் வந்தாலும் சிறப்புற கவனிக்கும் உயர்ந்த குணம் கொண்டவர்களாக திகழ்ந்தனர். உணவுப்பொருள்கள் குறைவாக இருந்தாலும் வரும் விருந்தினர் அனைவரையும் பந்தலிலே வரிசையாக அமரச்செய்து இல்லத்தில் இருக்கும் உணவை முறையாகப் பகிர்ந்து உபசரித்தனர். பெண், விருந்தினரை உபசரிக்கும்முறையை,

**“இல்லது படைக்கவும் வல்லன் உள்ளது**
**தவச்சிறி தாயினும் மிகப்பலர் என்னான்**
**நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்**
**இற்பொலி மகடூஉப் போல”**[3]

என்னும் பாடல் மொழிவதை அறியலாம்.

**நில அடிப்படையில் தொழில்முறை**

ஐந்திணையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றில் நில அடிப்படையில் தொழில்முறைகள் அமைகின்றன. குறிஞ்சி என்பது மலையும், மலைசார்ந்த இடமும் அந்நிலத்தின் தெய்வமாக முருகனை கொண்டு வழிபட்டனர். அந்நிலத்தில் தேனெடுத்தல், தினைகாத்தல், கிழங்கெடுத்தல், வெறியாடல் ஆகிய தொழில்கள் அமைகின்றன. முல்லை என்பது காடும் காடு சார்ந்த பகுதி ஆகும். முல்லையின் தெய்வம் திருமால். அந்நிலத்தில் வரகு, தினை விதைத்தல், ஆநிரை மேய்த்தல், ஏறு தழுவல் ஆகியனவாகும். மருதநிலத்து தெய்வமாக இந்திரனாகவும் அந்நிலம் வயலும் வயல் சார்ந்த பகுதியுமாகும். அதில் தொழிலாக நெல், கரும்பு பயிர் செய்தல், களையெடுத்தல், ஆகியவையுள்ளன. நெய்தல் நிலத்தில் கடலும் கடல்சார்ந்த பகுதியாக குறிக்கப்படுகிறது. அந்நிலத்தின் தெய்வம் வருணன். அந்நிலத்தில் வசிக்கும் மக்கள் கடலில் மீன் பிடித்தல், உப்புமீன் உப்ப வணிகம் போன்ற தொழில்களும் அமைகின்றன. பாலை நிலத்தின் தெய்வமாகத் துர்க்கையாகவும் அந்நிலம் மணலும் மணல் சார்ந்த வறண்ட பகுதியாகவும் காட்சியளிக்கும். அந்த நிலத்தில் வாழ்ந்த மக்களின் தொழிலாக வழிப்பறி, ஆநிரை கவர்தல் முதலானவை தொழில்களாக அமைகின்றன. இவற்றில் இடம் பெறும் நில வரையறை அடிப்படையில் அமையும் தொழிலில் பெண்கள் செய்யும் தொழிலையும் அவர்களின் சிறப்பையும் சங்கப் பாடல்கள் வலுள

**பண்டமாற்றுமுறை செய்தல்**

ஆண் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லுவது போல் பெண்ணும் உப்பை விற்று வெண்ணெல்லை அதற்குப் பண்டமாற்றாகப் பெறுவதற்காக உப்பு விளையும் வயலுக்குச் சென்றும் உப்பை எடுத்து உப்பிற்கு விலையாக நெல்லை பெறுவதும் ஆணுக்கு நிகராகப் பெண் தொழில் மேற்கொண்டனர் என்பதைக் குறுந்தொகைப் பாடல் விளக்குகிறது.

**“சேயாறுசென்று துணைபரி அசாவாது**
**உசாவுநர்ப் பெறினே நன்றுமன் தில்ல**
**வயச்சுறா எறிந்த புண்தணிந்து எந்தையும்**
**நீல்நிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்**
**உப்பை மாறிவெண்ணெல் தரீஇய**
**உப்புவிளை கழனிச் சென்றனள் அதனால்**
**பனிஇரும் பரப்பின் சேர்ப்பதற்கு**
**இனிவரின் எளியள் என்னும் தூதே”**[4]

என்னும் பாடல் புலப்படுத்துவதை அறியலாம்.

தொழில் மூலமாகப் பொருள் கொடுத்து பொருள் பெறும் வழக்க முறையைச் சங்க காலத்தில் பெண் செய்த புலனாகிறது. உற்பத்திமுறையைப் பெருக்கியும் நிலத்தில் இருக்கும் பொருளை மற்றொரு நிலத்திற்குக் கொடுத்தும் நிலத்தின் ஒற்றுமையைத் தொழிலின் மூலம் பெண் வளர்த்தனர் என்பதை இப்பாடல் வழியாக அறிய முடிகிறது. மீன்களை மீனவப் பெண்கள் எடுத்து தெருக்கள்தோறும், இல்லந்தோறும் சென்று விற்றும் அதற்குப் பதிலாகப் பிற பொருட்களைப் பெற்று வாழ்க்கை முறையினை மேற்கொண்டனர். பண்டமாற்றிற்குக் கிடைத்த நெல்லைத் தேவைக்குப் பயன்படுத்தினார். இதனை,

**"மீன் நொடுத்து நெற்குவை**
**மிசையம் பியின் மனைமறுக்குந்து"[5]**

என வரும் பாடல் இயம்புவதைக் காணலாம்.

மீனுக்கு நெல்லைப் பெற்றதைப்போல் தயிருக்கு நெல்லைப் பெற்றும் நெய்யை விற்று பசும் பொன்னை பெறாமல், எருமை, பசுகன்றுகள் வாங்கும் முறை என்பது பெண்கள் வாழ்வில் புத்திக் கூர்மையோடு செயல்பட்டு அச்செயலின் மூலம் பண்டமாற்று முறையினை நிகழ்த்தினர். தொழில் வளர்ச்சிக்கு நல்ல உதாரணமாகவும் உறுதுணையாகவும் பெண்கள் விளங்கினார்கள். இதனை,

**"நெய்விலைக் கட்டிப் பசும் பொன்கொள்ளாள்,**
**எருமை நல்ஆன் கருநாகு பெறூஉம்"[6]**

எனவும்,

**"கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்**
**மான்தசை சொரிந்தவட்டியும் ஆய்மகள்**
**தயிர்கொடுவந்த தசும்பு நிறைய**
**ஏரின் வாழ்நர் பேர்இல் அரிவையர்**
**குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்நெல்**
**முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்"[7]**

என்னும் பாடல் பகர்கின்றது.

பெண், மான் தசைக்கும் தயிருக்கும் பண்ட மாற்றாக நெல்லைப் பெற்றாள். இப்பண்டமாற்று முறையினைச் செய்து சமூகத்தில் நல்ல சிறப்பினைப் பெண் பெற்றிருந்தாள் என்பதைப் புறப்பாடல் விளக்குகிறது. குறிஞ்சி நிலத்தில் விளையும் பொருட்களான தேன், கிழங்கு ஆகியவற்றைக் கொடுத்து நெய்தல் நிலத்தில் கிடைக்கும் மீனையும், கள்ளையும் வாங்கினர். மருத நில மக்கள் கரும்பையும் அவலையும் கொடுத்து அதற்கு மாறாக வறுத்த மான் இறைச்சியைப் பெற்றுத் தொழிலை வளர்ச்சியடைய செய்துள்ளனர். அதனை,

**"தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்**
**மீன் நெய்யோடு நறவு மறுகவும்**
**தீங்கரும் போடு அவல் வகுத்தோர்**
**மான் குறையொடு மது மறுகவும்"[8]**

என்னும் பாடல் புலப்படுத்துகிறது.

சங்க இலக்கியம் பெண்ணின் தொழில்முறையில் அவளின் உழைப்பு, சிறப்பு, ஆற்றல், தன்னம்பிக்கை, செய்திகளைப் புலப்படுத்துகிறது.

**ஆடை உடுத்தும் முறை**

பண்டைக் காலத்தில் முதலில் தழையாடை உடுத்தினர். அதன்பின் பருத்தியால் நெய்த பருத்தி ஆடையை உடுத்தினர். நூலாடையும் உடுத்தினர். சாய மூட்டப்பட்ட ஆடை என்றும் பூத்தொழில் செய்த ஆடை எனவும் பட்டாடை எனவும் படிப்படியாக ஆடையின் வகைகளும் அதன் தரங்களும் உயர்ந்து வருகின்றன. பெண் ஆடை உடுத்தும் முறையில் கச்சு, புடவை, மேலாடை, இடுப்பாடை என ஆடைகள் வரைமுறைகளைக் கொண்டுள்ளனர். பெண்ணால் ஆடையும் ஆடையால் பெண்ணும் சிறப்படைந்துள்ளன. முதன்முதலாகத் தோன்றிய தழையாடையின் சிறப்பும் அதன் முக்கியத்துவத்தையும் விளக்குகின்றன. பெண் மென்மைதன்மை உடையவளாக விளங்குவதால், அம்மென்மைத் தன்மைக்கேற்றார் போன்று பூவினாலும், தழையினாலும் உடையை உடுத்துவதாகக் கூறுவதை கே. பகவதியம்மாள் விளக்குகிறார். “மகளிர் மென்மையானவர் என்பதனால் மென்மையான பூக்களும் தழைகளும் விரவித்தொடுத்து அணிந்தனர். இதனால் இவை பூவையரின் உடைகளாக விளங்கக் காண்கிறோம்”[9] என்று விளக்கம் கூறியுள்ளார். தழையாடையின் பயனையும் அவற்றால் உடலுக்கு ஏற்படும் மருத்துவ நலன்களும் குறிப்பிடத்தக்கன. ஆதிகாலத்தின் ஆடையாகத் தழையாடை தோன்றியது என்றும் இவை சங்ககாலத்திலும், தமிழகத்திலும் இருந்துள்ளது என்று கூறுகிறார் க.ப. அறவாணன். அவர் கூற்று என்பது, மனிதனின் ஆதியுடை தழைகளாகவே இருந்தன. சங்க காலத்தில் கூட இப்பழக்கம் தமிழகத்தில் இருந்தது என்பதை ~தழையுடை தருதல்| என்ற அகத்துறை தெளிவுறக் காட்டுகிறது”[10] என்று கூறுவார். இவர்களின் கருத்துரையின்படி ஆதியுடையாக இருந்த பழக்கம் காரணமாக சங்க காலத்தில் தழையுடை இருந்தது என்பதை இதன்மூலம் அறியமுடிகிறது. உடையாக உடுத்திக் கொண்டும், மாலையாகக் கோத்து அணிந்து கொண்டும், குழை முதலிய அணிகலன்களாய்ப் பூண்டும், கூந்தலின் கண்ணே செருகியும் பலபடித்தாகத் தழை அலங்காரத்தால் பொலிவு பெற்று அமைகிறது. இதனை,

**“உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்**
**தழையணிப் பொலிந்தஆயம்”**[11]

இப்பாடல் அடிகள் தழையை ஆடையாக உடுத்துவது மட்டுமல்லாமல் அவற்றை அணியாகவும் உடுத்தும் முறையினை மேற்கொண்டுள்ளதை நன்கு எடுத்துரைக்கிறது. நூலாடையைப் பெண்கள் உடுத்தினர். அந்நூலாடையால் அவர்கள் உடல் குளிர்ச்சித்தன்மை பொருந்தியதாகவும் பயன்படுகிறது. இதனை,

**“பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டு அல்குல்**
**அம்மாசு ஊர்ந்த அவிர்நூல் கலிங்கமொடு”**[12]

அவர்கள் வாழ்க்கைமுறைக்கு ஏற்றவாறு ஆடைகளை உடுத்தும்வகையினை உடுத்தியுள்ளதை கீழ்வரும் பாடல் நன்கு விளக்குகிறது. அதனை,

**“துணைப் புணர்ந்த மடமங்கையர்**
**பட்டு நீக்கித் துகில் உடுத்தும்**
**மட்டு நீக்கி மதுமகிழ்ந்தும்**
**மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்**
**மகளிர் கோதை மைந்தர் மலையவும்”**[13]

என்ற பாடல் எடுத்துரைக்கிறது.

பெண்ணின் வாழ்வு முறைக்கேற்றவாறும் வசதிகளுக்கேற்றவாறும் ஆடைகளின் தரங்கள் அமையும். உடுத்தும் ஆடைகளுக்கேற்றவாறும் அவர்களின் வாழ்வு சிறப்படையும். மேலும், மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதேயளவு மனிதன் உடுக்க உடை அவசியம்.

**பெண் அணிகலன் அணியும் முறை**

சங்ககாலப் பெண்கள் பல்வேறு வகையான அணிகலன்களை அணிந்திருந்தனர். அவர்கள் ஆடைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது போலவே அணிகலன்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். செல்வந்தர்கள் நகை அணிவதில் கொண்டிருந்த ஆசை அளவிடற்கரியது. அவர்களை அணி செய்து நின்ற அக்கால அணிகலன்கள் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தன. பெண் அணிந்த அணிகலன்கள் பெண்ணால் அணிக்கு அழகு, அணியால் பெண்ணுக்கு அழகு என்று கூறுவது போல அணிகலன்கள் உயர் மதிப்பினைப் பெற்றுள்ளன. பெண் அணியும் அணிகலன் பலவகையாக சுட்டப்படுகின்றன. தலை முதல் கால் வரை அணிகள் அணியும் வழக்கம் இருந்துள்ளது. பெண்ணை வர்ணிப்பது போன்று அணிகலையும் வர்ணிக்கும் அளவிற்கு அணியின் சிறப்பு மேலோங்கி இருந்தன. பெண் அதிக அளவில் அணிகலன் அணிந்திருந்ததை இலக்கியம் சுட்டுகிறது. தலையணி காதணி அணிந்த செய்தியை சங்க இலக்கியம் சுட்டுகிறது. இதனை,

> **“வானுறை மகளிர் நலனில் கொள்ளும்**
> **வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பின்**
> **ஓடுங்கீர் ஓதிக் கொடுங்குழை கணவ”**[14]

என்னும் பாடல் பறைசாற்றுகிறது. பெண் அணிந்த அணிகலன்களை விளக்கிக் கூறுகிறது. அணிகலன்கள் உயர்ந்தநிலையில் இருப்பவரும், இடைநிலையில் இருப்பவரும், தாழ்நிலையில் இருப்பவர்களுக்கேற்றவாறும் அணிகலன்கள் இருந்தன என்பதையும் அறியமுடிகிறது. முத்து, பவளம், மாணிக்கம், பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்கள் வழக்கினில் இருந்தன.

**பெண் வீரம்**

சங்ககாலத்தில் மன்னர்கள், மறவர்கள் போன்று பெண்களும் வீரத்தில் வலிமை வாய்ந்தவராக திகழ்ந்தனர். பெண் வீரவுணர்வில் ஆர்வம்கொண்டு செயல்பட்டாள். நாட்டின் நலன் கருதியும் மக்களின் முக்கியத்துவத்திற்கும் நன்மைப் பயக்கும்விதமாக அவர்களின் வீர உணர்வு அமைந்துள்ளது. ஆணுக்கு நிகராக மகளிர் போரப் பாசறைகளிலும் பணிபுரிந்துள்ளாள். போர் புரிய போர்க்களத்திற்குத் தன் தந்தையையும் தன் கணவனையும் தான் பெற்றெடுத்த புதல்வனையும் போர்க்களத்திற்கு அனுப்பும் வீரத்துணிச்சல் பெற்றிருந்தனா். சங்க இலக்கியப் புறப்பாடல்களும் பெண்ணின் வீரத்தை செம்மைப்பட எடுத்துரைக்கின்றன. அதனை,

போர்க்களத்தில் பகைவரின் படைகளை கண்டு அஞ்சிப் புறம் கொடுத்து மாண்டான் என்று அறியாதவர்கள் பல பேர் கூற அவனை ஈன்ற தாயானவள் அவர்கள் கூறும் செய்தி உண்மையானால் அவன் பாலுண்ட என் மார்பை அறுத்தெறிவேன் என்று சினந்துரைத்து வாளைக் கையில் ஏந்தி போர்க்களம் செல்லும் காட்சியும் அங்கு விழுப்புண் வீரமரணம் அடைந்த நிலையும் அதனால் அவள் ஈன்ற பொழுதினும் பெருமகிழ்ச்சி யடைவதும் அம்மகிழ்ச்சியால் வீர உணர்வு மிக்கவளாக பெண் பிரதிபலிப்பதைக் கீழ்வரும் புறப்பாடல் விளக்குகிறது. இதனை,

> **“கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்**
> **செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய**
> **படுமகன் கிடக்கை காணூஉ**
> **ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.”**[15]

என வரும் பாடல் உணர்த்துகிறது.

பெண்பாற் புலவர்கள் பெண்களின் வீரத் தன்மையைச் சங்க இலக்கியப் புறப்பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். அப்புலவர் காக்கை பாடினியார், நச்செள்ளையார், ஒக்கூர் மாசாத்தியார் ஆகியோர் ஆவார். பெண் வீரத்தில் சிறந்து விளங்கினர் என்பதைக் குறிப்பால் உணர்த்துவதை அறிமுடிகிறது.

## கல்வியின் சிறப்பு

மனிதனுக்கு கல்வி என்பது உயிர் நாடியே. கல்வி கற்பதால் மனிதன் அடையும் சிறப்பு மிக உயர்ந்தவையாகும். மனிதனின் தரத்தை உயர்த்திக் காட்டக்கூடிய சக்தி கல்விக்குண்டு. அக்கல்வி மனிதன் வாழும் வாழ்க்கையின் பக்குவத்தை விளக்கி நிற்கும். நன்மை தீமைகளை ஆராய்ந்து வாழ்வில் செயல்பட உந்து கருவியாக நன்மையூட்டும் விதத்தில் கல்வி அமைகிறது. சங்ககாலத்தில் பெண்ணுக்குக் கல்வி கற்கும் உரிமை இருந்துள்ளது. அக்கல்வியைப் பெற்று அவர்கள் பெண் புலவர்களாகவும் திகழ்ந்துள்ளனர். அரசர்கள் குறித்தும் நாட்டையும் பெண்ணையும் பாடும் வள்ளமை அவர்கள் கல்வி புலத்தைப் பெற்று இருந்தனர் என்பதை அறியமுடிகிறது. பெண் கல்வி கற்றதால் புலவராகவும், மன்னருக்கும் நாட்டிற்கும் நல்லனவற்றையும் தீயச் செயல்களையும் அறச் செயல்களையும் எடுத்துக் கூறும்வகையில் பெண்கள் திகழ்ந்தனர் என்பதைச் சங்க இலக்கியத்தின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் அகம் சார்ந்த வாழ்க்கை என்பது மகளிரை பெண்ணையும் முதன்மைப்படுத்திக் காட்டுகிறது. அந்தவகையில் பெண் சிறந்த இல்லறத் தலைவியாகவும் அமைந்தாள். மேலும், நல்ல பண்பு நலன்களைக் கொண்டிருந்தாள். விருதோம்பலில் சிறந்தவளாக உள்ளாள். தொழில் முறைகளிலும் காலத்திற்கேற்றார் போலும் நில அடிப்படையில் தொழில் நோக்கில் சிறந்தவர்களாகவும் கைதேர்ந்தவராகவும் விளங்கினர். ஆடை அணிவதிலும் ஒழுங்கு முறையினைக் கையாண்டுள்ளனர். அணிகலன்கள் அணியும் முறையைப் பின்பற்றினர். பெண் வீரத்தில் சிறந்து விளங்கினாள். மேலும், கல்வி பெற்று கல்வியால் நாடும், நாட்டு மக்களும் பயனடையும் நோக்கில் மேற்கொண்டனர். சங்ககால பெண் உயர்ந்த இடத்தில் மதிப்பும் சிறப்பும் பெற்றிருந்தாள் என்பதைச் சங்க இலக்கியத்தின் வழிநின்று அறியமுடிகிறது.

## குறிப்புகள்

1. அகநானூறு - 86: 1-19.
2. தொல்காப்பியம், கற்பியல், நூற்பா - 140.
3. அகநானூறு - 66: 1-5.
4. புறநானூறு - 331: 6-9.
5. குறுந்தொகை - 269.
6. புறநானூறு - 343: 1-2.
7. பெரும்பாணாற்றுப்படை - 164-165.
8. புறநானூறு - 343: 1-6.
9. பொருநராற்றுப்படை - 214-217.
10. கே. பகவதிஅம்மாள், சங்க இலக்கியமும் தழையுடைகளும், பக்கம்: 364.
11. க.ப. அறவாணன், மறவழிபாடு, பக்கம்: 21.
12. குறுந்தொகை - 295: 1-2.

13. நெடுநல்வாடை - 145-146.
14. பட்டிப்பாலை - 106-110.
15. பதிற்றுப்பத்து - 14: 13-15.
16. புறநானூறு, 278: 6-3.

**துணை நூல்கள்**

1. நா. மீனவன் தெ. முருகசாமி அகநானூறு, கோவிலூர் மடாலயம். கோவிலூர் 2004.
2. இளம்பூரணார், தொல்காப்பியம், சாரதா பதிப்பகம், சென்னை.
3. இரா. இளங்குமரன், புறநானூறு, கோவிலூர் மடாலயம், கோவிலூர், 2003.
4. தமிழண்ணல், குறுந்தொகை, கோவிலூர், கோவிலூர், 2002.
5. ச.வே. சுப்பிரமணியன், பத்துப்பாட்டு, கோவிலூர், கோவிலூர், 2003.
6. கே. பகவதி அம்மாள், சங்க இலக்கியமும் தழையுடைகளும், ஒன்பதாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை (தொகுதி-1) இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1977.
7. க.ப. அறவாணன், மர வழிபாடு, பாரிநிலையம், சென்னை, 1984.
8. அ.மா. பரிமணம், பதிற்றுப்பத்து, கோவிலூர் மடாலயம், கோவிலூர் 2003.